பொறுப்பானது அத்தகைய பிரிவின்கீழ் நிவாரணத்திற்காக விண்ணப்பத்தைச் செய்கின்ற திறத்தவர்மீதானதாதல் வேண்டும்.

ஏதேனும் கொவிட் - 19 சூழ்நிலை மீதான வழிகாட்டு நெறிகள் முதலியன முதற்றோற்றளவிலான சான்றாகக் கருதப்படுதல் வேண்டும்

**7**. (1) ஏதேனும் கொவிட் - 19 சூழ்நிலை தொடர்பில் அரசாங்கத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் வழிகாட்டுநெறி, பணிப்பு, சுற்றுநிருபம், அறிவித்தல் அல்லது முடிபு அச்சிடப் பட்டதாயினுஞ்சரி அல்லது இலத்திரனியல் வடிவத்திலாயினுஞ்சரி மேலதிக எண்பிப்பு இன்றி இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் வழக்கில், விண்ணபத்தில், மேன்முறையீட்டில் அல்லது வேறு சட்டவழக்கு நடவடிக்கையில் முதற்றோற்றளவிலான சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

(2) அத்தகைய வழக்கிற்கான விண்ணபத்திற்கான மேன்முறையீட்டுக்கான அல்லது வேறு சட்ட வழக்கு நடவடிக்கைக் கான திறத்தவர் ஒருவர் சான்றாக அத்தகைய வழிகாட்டுநெறி, பணிப்பு, சுற்றுநிருபம், அறிவித்தல் அல்லது முடிபு என்பவற்றின் ஏல்தகவை பிணக்கிற்கு உட்படுத்துகின்றவிடத்து, எண்பிப்பு பொறுப்பு அத்தகைய ஏல்தகவை பிணக்கிற்கு உட்படுத்துகின்ற திறத்தவர் மீதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக, ''அரசாங்கம்'' என்பது கொவிட் - 19 தொடர்பாக (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் வரையறுக்கப்பட்டவாறான எவரேனும் முறையான அதிகாரி எனப் பொருள்படும்.

பொருள்கோடல்

**8**. இச்சட்டத்தின் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி–

"கொவிட்-19" என்பது, (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புத் தொடர்பான கட்டளைச் சட்டத்தின்கீழ் 2020, மார்ச் 20 ஆந்தேதிய 2167/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் தனிமைப்படுத்தத்தகு

